www.tamilarangam.net

# பொய்மைக்குள் வாழ மறுப்போம்!

"மரணத்துள் வாழ்வோம்" ஆம்! இது எமது போராட்டம் ஸ்ரீலங்கா இராணுவ ஒடுக்குமுறைக்குள் உட்பட்டிருந்த போது ஈழக் கவிஞர்கள் பலரின் கவிதைகளைத் தாங்கி வெளி வந்த ஒரு கவிதைத் தொகுப்பின் தலைப்பாகும்.

இன்று எமது மக்களின் வாழ்நிலையை அன்றிக் கவனிப்பவர்கள் எவரும் இந்த கவிதைத் தொகுப்பின் தலைப்பு எமது இன்றைய சூழ்நிலைக்குப் மிகப் பொருத்தமானது என்பதைப் புரிந்து கொள்வர். நம்மைச் சுற்றி நடப்பவைகள் யாவும் இன்று எம்மை வெறும் பொய்மைக்குள் வாழ வைத்துக் கொண்டிருக்கின்றன.

உண்மையில் எமது போராட்டத்தில் எத்தனையோ தியாகங்களுக்கூடாகவும் எத்தனை அழிவுகளுக்கூடாகவும் நாம் இந்தக் கட்டத்தினை வந்தடைந்துள்ளோம். இத்தனை தியாகங்களுக்கூடாக நாம் இன்று பெற்றுக்கொண்டுள்ளதாகக் கூறப்படும் விடுதலை என்பது எத்தகையது?
இன்று அதிகாரத்தை கையிலேந்தியுள்ள தலைவர்கள் எத்தகையவர்கள்?
அவர்கள் காட்டும் அரசியல் பாதை எத்தகையது?
இவை இன்று உண்மையைத்தேடும் எவரது மனதிலும் எழும் கேள்விகளாகும்.
ஆனால் இன்று இவை கேட்கப்படக் கூடாதவைகளாகும். கேட்டால் நீங்கள் துரோகிகள் பட்டியலில் சேர்க்கப்படுவீர்கள். "கேட்டால் நாம் மரணத்துள் வாழ்வோம்.

இன்று உங்கள் உயிரைப்பறிக்கும் அதிகாரம் பச்சைப் பாலகர்களின் கைகளில் கொடுக்கப்பட்டுள்ளது. அப் பாலகர்களின் சிந்தனை சக்தியும் வாழ்க்கையின் முழு அர்த்தமும் அவனின் கழுத்திலே தொங்கும் சயனைட் வில்லையினுள் இறக்கப்பட்டுள்ளது. அப் பாலகர்கள் செய்யும் கொலைகள் ஒவ்வொன்றையும் நியாயப்படுத்தவும் உரிமை கோரவும், மறக்கவும் போலிப் பட்டங்களுடன் தமது சுய வாழ்க்கையை வளமாக்க நாட்டைவிட்டு ஓடிய பலர் இன்று இங்கு பெரும் பேச்சாளர்களாக பவனி வருகிறார்கள். இவர்கள் தமது அழிவு அரசியலை இங்கு நடத்துவதற்கும், தம்மைத்தவிர மக்களைப் பற்றி பேசும் எவரையும் துரோகிகளாக்கி கொன்றொழிப்பதற்கும் எதும் அறியா இளம் சந்ததியை சிந்திக்க முடியாத இயந்திரங்களாக்கி கொண்டிருக்கின்றார்கள்.

மக்களை முதுகெலும்பற்றவர்களாக்கி தமது துப்பாக்கித் துரைத்தனங்களை முன் தள்ளும் சர்வதேச உளவு ஸ்தாபனங்களின் செல்லப்பிள்ளைகளாக இவர்கள் தமது சுடுகாட்டு சாம்ராஜ்யத்தில் உண்மை தேடும் மக்களின் மண்டை ஓடுகளால் சிம்மாசனம் அமைத்து ஆட்சி செய்ய பாதையமைத்துச் செல்கிறார்கள். 'மக்கள் எம் பக்கம்' என கொக்கரிக்கிறார்கள். இதுதான் எமது அரசியல் கலாச்சாரம் என பறைசாற்றுகிறார்கள்.

பாவம் நாங்கள்!
என செய்வோம் மரணபீதியில் உண்ணுவதும் உறங்குவதுமே வாழ்க்கை என்றநிலையில் செய்வதறியாதவர்களாக்கி நிற்கிறோம். நடுநிசியில் எமது அயலவர்கள் கடத்திச் செல்லப்படுவதையும், சின்னஞ் சிறார்கள் மீது ஆயுதங்கள் திணிக்கப்படுவதையும், இரகசியமாக நடைபெறும் நூற்றுக்கணக்கான கொலைகளையும் கண்டும் காணாதது போல் கேட்டும் கேளாதது போல் வாழப் பழகிக்கொண்டு விட்டோம். நம்மை யார் கேட்டாலும் இப்போது சுமுகமான சூழல் நிலவுகிறது எனக்கூறி எமது வாழ்நிலையை நியாயப்படுத்த பழகிவிட்டோம். தலைக்கு மேல் வெள்ளம் ஏறிவிட்டது இனி சாண் ஏறி என்ன? முழம் ஏறி என்ன? என்று விட்டுவிட்டு மௌனமாய் பொய்மைக்குள் வாழப் பழகிவிட்டோம்.

எமது சமூகத்தினுள் இருந்தே உருவெடுத்த, எம்மையறியாது நாமே வளர்த்துவிட்ட பயங்கரவாதம் இன்று பூதாகரமாக உருவெடுத்து வெறும் கைகளுடன் வலுவிழந்து போய் நிற்கும் மக்கள் மீது இன்று ஒருவித ஒழுங்கை, கட்டுப்பாட்டை, ஐக்கியத்தை, ஸ்திர சமூக நிலையை கொண்டுவந்துள்ளதாக மேம் போக்காகத் தோன்றினாலும், இதன் உண்மையான பின்னணி மரணபீதியுடன் பின்னிப் பிணைந்துள்ளது.

எம்மை பொய்மைக்குள் வாழ வைத்தது மட்டுமன்றி எமது தலைவர்கள் என்று கூறுவோர் வாயிலிருந்து கூச்சமில்லாமல் பொய்யும் புரட்டும் வந்து விழுந்து கொண்டிருக்கின்றன. செய்யும் கொலையை இலாபமில்லாவிட்டால் மறைப்போம், செய்யாதவற்றை இலாபம் இருந்தால் ஏற்போம். மக்கள் சாவதால் இலாபம் இருந்தால் மக்களையும் கொல்வோம் அப்படியானதொரு உயர்ந்த தத்துவமும் கொள்கையும் கொண்டவர்கள்எமது தலைவர்கள்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இத் தலைவர்களில் ஒருவர் அண்மையில் சொன்னார் 'முழு உலகிற்குமே வழிகாட்டும் வெற்றி கொண்டவர்கள் நாங்கள்' என்று. ஆம்: உண்மை- மனித நாகரிகம் தலை குனியும், வகையில் கொலை செய்யும் முறைகளை நாம் உலகிற்கு காட்ட முடியும். செய்த கொலையை பச்சையாக மறைக்கும் முறையை உலகிற்கு காட்ட முடியும், ஏன் சிலவேளை முழு உலக மக்களுமே சயனைட் அருந்திச் சாவதுதான் அதி உத்தமமான தியாகம் என்று கூட இவர்கள் உலகிற்கு வழிகாட்ட முடியும். இப்படி ஒரு உயர்ந்த தத்துவத்தை உலகிற்கு வழங்கிய பெருமை எமது சமூகத்திற்கு இன்று வந்தாலும் ஆச்சரியப்பட ஏதுமில்லை.

மக்கள் தமது வாழ்க்கையின் பெறுமானமிழந்த வெறும் மரக்கட்டைகளாக வாழ கட்டாயப் படுத்தப்பட்டுக் கொண்டிருக்கும் வேளை, எமது சமுதாயம் பதவி வெறியர்களினதும், சுயநல கும்பல்களினதும் தமது போலி கௌரவங்களை பாதுகாப்பவர்களினதும் கோட்டையாக மாறி வருகிறது. உண்மையைத் தேடுபவர்களும், மக்களை நேசிப்பவர்களும் 'அலாதி மௌனத்துடன் தமது நாளாந்த கடமைகளில் எதுவித விருப்பு வெறுப்பற்று ஈடுபட நிர்பந்திக்கப் பட்டிருக்கிறார்கள். ஆனால் எமது புலிகளோ இந்த கொலைகார தலைவர்களின் பின் அங்கிகளை கைப்பற்றி இயக்க மரபு என்ற போர்வையில் கழுத்தில் தொங்கும் சயனைட் மாலைகளுடன் ஒளிமயமான எதிர்காலத்தைக் காணவென்று நடை போடுகிறார்கள். எதிரியிடமிருந்து இயக்கத் தலைவர்களையும் இரகசியங்களையும் காப்பாற்ற சயனைட் அருந்தி சாகவே 'வேண்டும்' என்று பலவீனமான மனநிலைக்கு தள்ளப்பட்ட அப்பாவி ஆட்டுக் குட்டிகளாக மாறியுள்ளார்கள். சயனைட் அருந்தாமல் எதிரியின் முகாமினுள் உயிருடன் வாழலாம் சயனைட் அருந்தாவிட்டால் தமது இயக்கமே தம்மை தண்டிக்கும் என்னும் கோர தத்துவத்தின் கீழ் காலம் தள்ளுகிறார்கள்.

இவர்களுடைய தாரகமந்திரங்களான விடுதலை வீரர்கள் துரோகிகள் போன்ற பதங்களின் பின்னால் உள்ள பொய்மையான அர்த்தங்களை நாம் கண்டுகொள்ள வேண்டும்.

ஒரு காலத்தில் இந்தியாவோடு தாம் கூடிக் குலாவியதையும், அவர்களின் உளவு ஸ்தாபனங்களின் ஆலோசனை கேட்டதையும், அவர்கள் தம்மை ஏமாற்றியதையும் இவர்கள் துரோகமாகக் கொள்ளமாட்டார்கள். அது வீரமறவர்களின் ராஜ தந்திரம். இன்று தங்களின் தேவைக்காக பிரேமதாசாவின் அரவணைப்பில் குளிர்காயும் இவர்கள் அரசாங்கம் செய்யும் சகல கொலைகளையும் கூட கண்டும் காணாதது போல் இருக்கும் வீரர்கள் இவர்கள்.

இவர்கள் எந்த சக்தியோடும் கை கோர்க்க எந் நேரமும் தயாராய் இருப்பார்கள். அது பாசிசமா, உளவுஸ்தாபனமா, மேலாதிக்க சக்தியா எதைப்பற்றியும் கவலைப்படுவதில்லை அல்லது அந்த சக்திகள் எமது மக்களின் நலனை காப்பாற்றுமா என்றும் கூட பார்ப்பது இல்லை. மாறாக இவர்கள் பார்ப்பதெல்லாம் அந்த சக்தி தங்களை தலைவர்களாக ஏற்றுக்கொள்ளுமா. தங்களை அதிகாரத்தில் இருத்துமா என்பதுதான்.
அப்படி இல்லாவிட்டால் இவர்கள் முரண்டு பிடிக்க ஆரம்பித்துவிடுவார்கள்.
உடனே கத்தவும் ஆரம்பித்துவிடுவார்கள்.
ஏனையோர் எல்லாம் துரோகிகள், தம்மைத்தவிர ஏனையோர் எல்லோரும் துரோகிகள்.

நாம் ஒன்றை மறக்கக் கூடாது. அன்று துரையப்பா மட்டும்தான் துரோகி இன்று தமிழ் மக்களில் அரைவாசிக்கு மேற்பட்டோர் துரோகிகள். உலகெங்கும் தமிழருக்கு துரோகிகள் நிறைந்து போய்விட்டனர்

இவர்களது கொடூரமான அழிவு அரசியல் ஆக்கபூர்வமாக செயற்பட முற்பட்ட சக்திகளை கையாலாகதவர்களாக்கி, விரக்தியும் பழிவாங்கலும் தன்னின தமிழ் மக்களின் நலனிற்கு எதிராகவும் செயற்பட வைத்தது. ஒரே குடும்பத்தில் பிறந்த சகோதரர்களையே வெட்டிக் கொல்லவும், சுட்டுப் பொசுக்கவும் வழிகோலின.

இதுதான் இவர்களின் அரசியல் வரலாற்றுச் சாதனை
நாங்கள் இந்தப் பொய்மையான நிலைக்குள்தான் தொடர்ந்தும் வாழப் போகிறோமோ?



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

மக்களே!

ஊமைகள் வாழும் ஊரிலே உளறுவாயன் பேச்சாளன் என்ற ஒர் பழமொழி உண்டு. அது போல் ஆகிவிட்டது எம் கதை. மக்களும் மக்களை நேசிப்பவர்களையும் துப்பாக்கி முனையில் ஊமைகளாக்கிவிட்டு உளறுவாயர்கள் பேச்சாளர்கள் ஆகிவிட்டனர். திறமை உள்ள ஏனையோர்களை அழித்து ஒழித்துவிட்டு தாமே அதி திறமைசாலிகள் என காட்டிக் கொள்கிறார்கள். துப்பாக்கி முனையில் மக்களை ஊமைகளாகவும் குருடர்களாகவும், செவிடர்களாகவும், முடவர்களாகவும் மாற்றி வைத்திருக்கும் இவர்கள் ஒட்டு மொத்தமாக மக்களை அங்கவீனர்களாக மாற்றி விட்டார்கள்.

ஆனால் இவர்களோ எம்மையும் எமது சிந்தனை அனைத்தையுமே தமது துப்பாக்கிகளுக்கும் சப்பாத்துகளுக்கும் கீழ்ப்பட்டதாக நினைக்கிறார்கள். எமது சமுதாயத்தையும் எதுவித தாக்க சக்தியுமற்ற மலட்டு சமுதாயமாக்க விளைகிறார்கள்.

இந்த பொய்மையான வாழ்வு சிதிரமடைந்த நாம் பட்டதெல்லாம் ஒரு வித பீதியுடனான பயங்கரச் சூழ்நிலையில் கோரப் பிடியின் சிக்கித் திணறுவது தொடருமா?!

அல்லது, திரும்பவும் எம் மீது வெறிகொண்ட இராணுவ அட்டகாசம் அவிழ்த்து விடப்படுமா? என்ற நிலையற்ற நிகழ் காலத்தையே நாம் எதிர் நோக்கி நிற்கிறோம்.

ஆனால் இவை பற்றி நாம் இன்று வெளிப்படையாக எதுவும் பேச முடியாது. பேசினால் எமது மூச்சு நிறுத்தப்பட்டுவிடும். நாம் துரோகிகள் பட்டியலில் சேர்க்கப்பட்டுவிடுவோம்.

நாம் வெளிப்படையாக உண்மைக்குள் வாழ முடியாது! ஆனால் எமக்குள்ளேயே பொய்மைக்குள் வாழ்வதை மறுக்க முடியும்.

ஆகவே நாம் இன்று செய்ய வேண்டியது என்ன?

ஆம் நாம் சிந்திப்பதுதான். அதற்கு இவர்கள் தடை போடவோ மறிவிதிக்கவோ முடியாது: ஆனால் சிந்திக்காத, தனியே சுயநலம் மிக்க ஜடங்களாக எம்மை மாற்ற முடியும். மாற்றிக் கொண்டிருக்கிறார்கள்.

உண்மையானவற்றை நாம் எமது சிந்தனைக்குள்ளேயே தேடுவோம். ஏன் எமது போராட்டம் அழிந்தது? எமது இளைஞர் சமூகம் ஏன் இப்படி சீரழிந்தது? வரலாற்றை உற்று நோக்குவோ

வாழ்க்கையின் அர்த்தம் என்பது உண்ணுவதும் உறங்குவதும் குடும்பத்தை பெறுவதும் மட்டுமல்ல அது அதற்கு மேலானது.
ஆகவே பொய்மைகளை கேள்வி கேட்போம். மௌனமாகவே உண்மைகளைத் தேடுவோம்.

சிந்தனை மூலமாக பொய்மைக்குள் வாழ மறுப்பதே எமது போராட்ட வடிவமாக அமையட்டும் உண்மைக்குள் வாழும் காலத்தை தேட வேண்டியது எமது பணி.
ஆம் நமது போராட்டத்தில் உயிரிழந்த சகல மக்களின் சமாதி மீது திரும்பவும் உறுதியிட்டுக் கூறுவோம்
அதற்காக போராட வேண்டிய காலம் வரும். அதுவரை;

மௌனமாய் போராடுவோம்!
மனங்களால் இணைந்துகொள்வோம்!
பொய்மைக்குள் வாழ மறுப்போம்!

– விடுதலைப்பாதை –

28-05-1990

************************************************

இது ஆயுதங்களால் நெரிக்கப்பட்ட தொண்டைகளின் ஈனக்குரல் இதை இயன்றவரை பரவலாக்குவது உங்கள் கடமை.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# புலிகளுக்கும் அமெரிக்காவுக்கும் தொடர்பு?

## ஈ.என்.டி.எல்.எவ். ஜயகாந்தன் பேட்டி

இந்தியாவில் இருந்து வெளிவரும் "நமது நிருபர்" பத்திரிகைக்கு அளித்த பேட்டியில் ஈ.என்.டி.எல்.எஃப் இயக்கத்தைச் சேர்ந்த ஜயகாந்தன் என்பவர் அமெரிக்க அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்து புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தியதைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறார்.

"திருகோணமலையை அமெரிக்காவிற்கு தாரை வார்க்க இலங்கை அரசு முடிவு செய்து விட்டது. இந்திய அமைதிப்படை ஈழமண்ணில் இருக்கும் வரை அமெரிக்காவின் இந்த எண்ணம் ஈடேறாது. இந்தியாவுடன் நட்பு எண்ணத்துடன் இருக்கும் மாகாண அரசு திருகோணமலையில் இருப்பதும் நல்லதல்ல. இந்திய அமைதிப்படையும் வெளியேற வேண்டும். அதோடு இந்தியாவின் நட்பு போராளிகள் இயக்கமும் வெளியேற வேண்டும் என திட்டம் போட்டு திட்டம் வெற்றி பெற புலிகளையே பயன்படுத்த நினைத்தது இலங்கை அரசு. பிரிட்டிஷ் தூதரகத்துக்கு சொந்தமான காரில் அமெரிக்க அதிகாரிகள் சிலர் முதன் முதலாக யாழ்ப்பாணம் பகுதிக்கு வந்தனர். பாலசிங்கம் மொழி பெயர்க்க பிரபாகரனுடன் முதல் கட்ட பேச்சுவார்த்தையைத் தொடங்கினர். இரண்டாம் கட்ட பேச்சுவார்த்தையில் பாலசிங்கத்தை தவிர்த்து விட்டு மொழி பெயர்ப்பாளராக தமிழ் தெரிந்த ஒருவருடன் அமெரிக்க அதிகாரிகள் யாழ்ப்பாணம் வந்தனர். மீண்டும் பேச்சுவார்த்தை பிரபாகரனுடன் நடந்தது. இதன் பிறகு புலிகளின் குரல் மாறியது. இந்தியா உதவி இல்லாமல் நாங்கள் எங்கள் பிரச்சனையை இலங்கை அரசுடன் பேசப்போகிறோம் என அறிவித்தது. அறிவிப்பை பிரேமதாசா ஏற்றார்." என்று அமெரிக்க பேச்சுவார்த்தைகள் பற்றி கூறியிருக்கிறார்.

இந்திய அமைதிப்படைக்கும் புலிகளுக்குமான தொடர்புகள் பற்றி குறிப்பிட்டபோது " இந்திய அமைதிப்படை இலங்கையில் இறங்கிய போது புலிகள் தான் மிக நெருங்கிய நண்பர்கள். இந்த நட்பும் இவ்வளவு நெருக்கமானது என்பதை வேண்டுமானால் விளக்குகிறேன். சிங்கள இராணுவம் 12 புலிகளை கைது செய்து கொழும்புக்கு கொண்டு செல்ல முயன்ற நேரத்தில் தலைமை கட்டளைப்படி விசம் சாப்பிட்டு விட்டனர். அவர்களில் ஒருவர் குமரப்பா. இந்திய அமைதிப்படை ஈழம் வந்த பிறகு குமரப்பாவுக்கு திருமணம் நடந்தது. மணமகள் வீடு மட்டக்களப்பில். மணப்பெண் யாழ்ப்பாணம் வரவேண்டும், பெண் அழைத்துவர இந்தியப்படையின் ஹெலிகொப்டர் சென்றது. இந்த திருமணம் பிரபாகரனின் தலைமையில் நடந்தது. மணவிழாவில் மாப்பிள்ளை வீட்டார் போல அமைதிப்படை உயர் அதிகாரிகள் சிலரை புலிகள் நடத்தினர். இந்திய அமைதிப்படையினர் மிக நெருங்கிய நண்பர்களாக காட்சி தந்தது புலிகள் இயக்கமே" என்றும் அவர் குற்றம் சாட்டியிருக்கிறார்.

# இலங்கைப் பிரச்சனை: ஒரு விற்பனைப் பொருள்

**கலை மாநாட்டில் ஏ. எஸ். பன்னீர்ச்செல்வன் வேதனை**

- உரையின் சிறு பகுதி
- நன்றி பாலம் Nov 1989

" சரி, இலங்கையில், இவ்வளவு கொடுமைகளையும் மீறி தொடர்ந்து கிட்டத்தட்ட 10 ஆண்டுகளாக நடைபெற்று வரும் ஆயுதப் போராட்டத்தினால் சமூக மாற்றங்கள் ஏதாவது நிகழ்ந்திருக்கிறதா? என்று பார்த்தால் அதுவும் இல்லை. இன்று EPRLF மற்றும் ENDLFஇன் அரசியல் நிலை மிக மோசமானதாக இருக்கலாம்; மிகப் பெரிய துரோகச் செயலாகக்கூட இருக்கலாம். ஆனால் அதை மக்கள் கண்டிக்கின்ற விதம் இருக்கின்றதே அங்குதான் நாம் கவனிக்க வேண்டியிருக்கிறது. EPRLFஇன் துரோகத்தனத்தைச் சுட்டிக்காட்டி அவர்கள் பயன்படுத்துகிற சொல் 'ஈயப் பள்ளர்'. ENDLFஐ திட்டுவதற்காக அந்த மக்கள் பயன்படுத்துகிற சொல் 'ஈயென் நளவர்'. ஆக, 'சாதியம்' இன்னும் அப்படியேதான் இருக்கிறது. பத்தாண்டு காலத்துக்கும் மேற்பட்ட ஆயுதப் போர் சாதியத்தைத் துளிகூடத் தொடவில்லை. 'வரதட்சணை' அப்படியேதான் இருக்கிறது. என்ன கொடுமை இது? "

சே!

சே!
என்ன கேவலம்?
கொலையைக் கூட
நாகரீகமாகச்
செய்ய முடியாத
காட்டுமிராண்டிகள்
ஆகிவிட்டோம்
சே!
என்ன ஞானம்
சத்தம் கேட்க
வேண்டும்
என்பதற்காகவே
சுட்டுக்
கொண்டிருக்கிறோம்
சே!
என்ன விந்தை?
இல்லாததற்காக
இருப்பவர்களையே
இல்லாதவர்கள்
ஆக்குகின்றோம்
சே!
என்ன தத்துவம்
எதிரியிடம்
துப்பாக்கி வாங்கி
சகோதரனைச் சுட்டுக்
கொண்டிருக்கிறோம்
சே!
என்ன தத்துவம்
அழிவில்லாமல் - இல்லையே
விடுதலை என்று
எம்மையே அழித்துக்
கொண்டிருக்கிறோம்.

பூங்குயிலவன்

இரவுக்கு இரவு மேசைக் கடியில் பதுங்கிக் கிடக்கிறாய்
உனது குழந்தைகளுடன் அசைவற்று.
மெழுகுவர்த்திகூட கொளுத்த முடியாது
நிழல் அல்லது ஒரு சத்தம்கூட விட்டோர் அனைவரையும் கொன்றுவிடும்.
என்ன இருக்கிறது?
நம்மிடம் மின்சாரமில்லை
நம்மிடம் பணமில்லை
பெரும்பான்மை மக்களுக்கு உணவென்பதே கிடையாது
நாம் வேலை செய்த இடங்களோ தரைமட்டமாகிவிட்டன.
நம்மிடம் செயல்படும் மருத்துவமனையும் இல்லை
மருந்தில்லை, எரிபொருளில்லை
15 வருடங்களாக யுத்தம்....

— ரஜினி திராணகம, யாழ்ப்பாணம்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

# "தேசிய" "விடுதலைப்" போராளிகள்

தாயகம் மீது விழுந்த பல குற்றச்சாட்டுகளில் ஒன்று தாயகம் தமிழ் தேசிய விடுதலைப் போராட்டத்துக்கு எதிராகவும் அந்த விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்து செல்கின்ற புலிகளுக்கு எதிராகவும் குரலெழுப்புகிறது என்பது. வெறும் புலி எதிர்ப்பு வாதம் மக்களுக்கோ, எங்களுக்கோ எந்த விதத்திலும் பயன் அளிக்காது. இந்த குற்றச்சாட்டை முன்வைப்பது தமிழ் மக்களின் நலன் மேல் அக்கறை கொண்டவர்கள் அல்ல. மாறாக தமிழ் விடுதலைப் போராட்டத்தின் ஏஜண்டுகளாக தங்களை கருதிக் கொள்பவர்களும் குத்துக்கரணம் போடுவதற்காக காத்துக் கொண்டிருப்பவர்களும் தான். இவர்களில் ஏஜண்டுகளாக தங்களை கருதி கொள்பவர்கள் தமிழ் மக்களிடம் இருந்து எந்த விதத்திலும் நியாயமான முறையில் அங்கீகாரம் பெறாதவர்கள். குத்துக் கரணம் போடக் காத்துக் கொண்டிருப்பவர்கள் இந்த சீசனுக்கு என்ன பொருள் என்று பார்த்து வியாபாரம் செய்பவர்கள். இந்த இரு சாராருமே தமிழ் மக்களின் நன்மையை மனதில் கொண்டு தான் இந்த கோசங்களை வைத்திருக்கிறார்களா என்பது பலத்த கேள்விக்குறி.

புலிகள் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுத்துச் செல்கிறார்கள், ஆகவே அவர்களை நாங்கள் ஆதரிக்க வேண்டும் என்று ஒரு சாராரும் போராட்டம் ஜனநாயகப்படுத்தப்படும் வரை (தங்கள் கையில் கிடைக்கும் வரை) போராட்டம் கொண்டு செல்லப்பட வேண்டும், ஆகவே புலிகளை நாம் ஆதரித்தே ஆகவேண்டும் என்று ஒரு சாராரும் தற்போதைய நிலையில் தமிழ் மக்களுக்கு பாதுகாப்பாக வேறு ஒரு தலைமை இல்லை, புலிகள் இன்று அழிக்கப்பட்டால் தமிழ் மக்கள் அழிக்கப்படுவார்கள் என்று இன்னொரு சாராரும் என்று பலர் புலிகளை ஆதரிக்க முன்வந்திருக்கின்றனர். (இவர்கள் எல்லாம் ஓரளவு சிந்திக்க தெரிந்தவர்கள். நின்று ஃபைட் பண்ணுகிறார்கள் என்று விசுவசிக்கும் பக்தர்கள் பற்றி நாங்கள் அலட்டிக் கொள்ள வேண்டிய அவசியம் இல்லை)

ஈழப்போராட்டம் என்று நம்பப்படும் தற்போதைய தமிழர்களின் போராட்டம் ஒரு நியாயமான போராட்டம் என்றும் (அதன் நியாய அநியாயங்களை பின்பு ஒரு முறை "கவனிப்போம்".) புலிகள் அதன் தலைமைச் சக்திகள் என்றும் (சும்மா ஒரு பேச்சுக்குத்தான்) கருதிக் கொண்டு நிலைமையை "கவனிப்போம்.

தமிழ் மக்களுக்கு புலிகளை விட வேறொரு தலைமை இல்லை என்பதை யாரும் மறுக்கவில்லை. ஆனால் தங்கள் தலைமையை தெரிவு செய்யும் தகைமை எப்படி தமிழ் மக்களிடம் இருந்து பறிக்கப்பட்டது என்பதையும் இந்த தலைமை எப்படி தமிழ் மக்கள் மேல் திணிக்கப்பட்டது என்பதையும் புரிந்து கொண்டால் நியாயங்கள் புரியும். திட்டமிட்டு மிதவாத, தீவிரவாத தலைமைகள் அழிக்கப்பட்டதாலேயே புலிகளின் தலைமைத்துவத்தை வேறு வழியின்றி மக்கள் ஏற்றுக் கொள்ள வேண்டி வந்தது. (புலிகள் பல கட்சி ஆட்சி முறைக்கு தயார் என்றதும் ஆயுதங்களை வைத்துக் கொண்டே மற்றக் குழுக்கள் சுதந்திரமாக தேர்தலில் பங்கு பற்றலாம் என்று கூறியதும் தங்களை எதிர்க்க இன்னொரு சரியான தலைமை இல்லை என்பதை உறுதி செய்து கொண்ட பின்பே. அதிலும் இப்படியான நிலையிலும் எங்கே தேர்தல் ஒன்று நடந்து மக்கள் தங்களை புறக்கணித்து விடுவார்களோ என்ற பயத்தினால் தான் புலிகள் இந்த சண்டையை தொடங்கியதாகவும் சில "அரசியல் அவதானிகள்" கூறியிருக்கிறார்கள்) துரோகிகள் என்று அழிக்கவுடன் அதை ஏற்றுக் கொள்ள பல பக்தர்கள் இருப்பதால் அவர்களுக்கு எதுவுமே சுலபமாகி இருந்தது.

இருந்தாலும் தற்போதைய நிலையில் புலிகள் தமிழ் மக்களை பாதுகாக்கிறார்களா என்பது பலத்த கேள்விக்குறி. தற்போதைய நிலையில் தங்களைப் பாதுகாக்க வேண்டிய கட்டாய நிலையில் புலிகள் உள்ளார்கள். அப்போது மக்கள் தங்களைத் தாங்களே பாதுகாத்துக் கொள்ள வேண்டும் என்று கூறி ஓடிய போது மக்களைப் பாதுகாப்பது பற்றி அவர்களுக்கு சிந்தனை வரும் என்று எதிர்பார்க்க முடியாது. மக்களைப் பாதுகாப்பது பற்றி சிங்கள அரச அக்கறை கொண்ட அளவுக்கு (ஐயையோ, நாங்கள் கைக்கூலிகள் அல்லவா) புலிகள் அக்கறைப்படவில்லை என்பது உண்மை. விமானத்தாக்குதல்களுக்கு முன் அரசு துண்டுப்பிரசுரங்களை விமானம் மூலம் வீசியிருந்ததும், "மக்கள் நலன்" கருதி மட்டக்களப்பில் பின்வாங்கியவர்கள் இன்றும் யாழ்ப்பாணத்தில் நின்று ஃபைட் பண்ணுவதும் இதற்கு ஆதாரங்கள். புலிகள் இன்று மக்கள் அழிக்கப்படுவதாக பாரிஸிலும் லண்டனிலும் அறிக்கைகள் விடலாம். (அதில் உண்மை உண்டு என்பதும் உண்மை) ஆனால் தாக்குதல்களின் போது இறந்த போராளிகளுக்கு செலுத்தப்பட்ட "வீரவணக்கங்கள்" அங்கு இராணுவம் மீண்டும் வந்து தாக்கியபோது இறந்த மக்களுக்கு கொடுக்கப்படவில்லை. ஒரு உண்மையான தலைமையோ, தேசிய போராட்ட சக்தியோ தனது மக்களுக்குத் தான் முக்கியம் கொடுக்கும். இறந்த அப்பாவிகளின் எண்ணிக்கையை அதிகரித்து பிரசாரம் செய்தலும் இறந்த போராளிகளின் எண்ணிக்கையை குறைத்து மானம் காத்தலும் பிரசார தந்திரமே அன்றி தேசிய விடுதலைப் போராட்டம் அல்ல. மக்களின் நலன் கருதாத எதுவுமே பொறுப்புணர்வு மிக்க தலைமை அல்ல.

இன்றைய யுத்தம் தமிழ் மக்களுக்கு எதிரானது என்ற கருத்திலும்..... புலிகள் இன்று மக்களுக்கிடையில் நின்று தாக்காவிட்டால் மக்களை அழிப்பதற்கு என்ன நியாயத்தை அரசு வைக்கப் போகிறது? தற்போதைய போரை அரசு சார்பாக நின்று நியாயம் என்று ஏற்றுக் கொள்ளும் வெளிநாட்டு அரசுகளும் அப்பாவி மக்கள் வெறும் குண்டு வீச்சுத் தாக்குதல்களால் கொல்லப்படுவதை பார்த்துக் கொண்டிருக்க மாட்டா. அரசு தமிழ் மக்களை அழிப்பதற்கான ஒரு எண்ணத்தைக் கொண்டிருக்கிறது என்றால் அதை நியாயப்படுத்தும் தொழிலையே புலிகள் செய்து கொண்டிருக்கிறார்கள். வைத்தியசாலை, மக்கள் குடியிருப்புகள், அகதி முகாம்களுக்குள் நின்று துப்பாக்கிப் பிரயோகம் செய்வது என்பது மனிதர்களை கேடயங்களாக பயன்படுத்தும் யுக்தியே.

இராணுவம் திருப்பித் தாக்கும் போது இனஅழிப்பு என்று கூறுவது நியாயப்படுத்தக் கூடிய ஒன்றா? பாலஸ்தீன அகதி முகாம்களுக்குள் வெறிய கிறிஸ்தவப் படைகள் நுழைந்து கொன்றதற்கும் தற்போதைய தாக்குதல்களுக்கும் நிறைய வித்தியாசங்கள் உண்டு. மக்களுக்குப் பின்னால் ஒளிந்திருந்து தாக்குபவர்கள் மக்களைப் பாதுகாக்கும் தலைமைகள் என்பது சிரிப்புக்குரிய விடயம்.

'தன்னை நம்பியவர்களை ஆபத்து நேரத்தில் கைவிட்டு தப்பியோடும் எதுவும் தலைமையே அல்ல. வடமராட்சியில், கிழக்கில், இந்திய இராணுவத்துடன் மோதும் போது முல்லைத்தீவில் எல்லாம் மக்கள் கைவிடப்பட்ட நிலையில்தான் இருந்தார்கள். இப்போது கூட தப்பியோட வழியில்லாததால் நின்று போராட வேண்டிய கட்டாயம் ஏற்பட்டுள்ளது.

புலிகளை விட்டால் தமிழ் மக்களுக்கு வேறு தலைமை இல்லை என்பது அசட்டுத் தனமானது. "கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தின் முன் தோன்றிய" தமிழர்கள் புலிகள் இல்லாமல் அழிந்து போய் விடமாட்டார்கள். ஆயிரம் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்த மக்கள் ஒரு பதினேந்து வருட கால வரலாற்றைக் கொண்ட ஒரு தலைமை இல்லாமல் அழிந்து விடும் என்றால் அது தலைமையின் தவறு அல்ல. அந்த மக்களின் தவறு. 56 கலவரத்தின் போது இருந்த தலைமைகள், 77 கலவரத்தின் போது இருந்த தலைமைகள் என்று எல்லாமே அழிந்தும் அழிக்கப்பட்டும் போனபோது மக்கள் தொடர்ந்தும் வாழ்ந்து கொண்டு தான் இருக்கிறார்கள். புலிகள் இல்லாமல் தமிழ் மக்களுக்கு ஏற்படும் அழிவை விட புலிகள் மக்களின் பின்னால் நின்று தாக்குவதால் ஏற்படும் அழிவே அதிகமானது. இன்று புலிகள் அழிந்து போனால் இனமே அழிந்து போகும் என்றால், ஒரு தனித்தலைமையில் மட்டுமே ஒரு இனம் தங்கியிருக்கும் என்றால் அந்த இனத்தின் இயலாமையையே அது காட்டுகிறது. தன்னைத் தானே பாதுகாத்துக் கொள்ளக்கூடிய ஆற்றல் அற்ற அந்த இனம் எப்போதுமே அடிமையாகத் தான் வாழும்.

எந்த சூழ்நிலையிலும் ஆயுதம் இல்லாமல் ஒரு சரியான தலைமைத்துவத்துக்கான ஆளுமையை புலிகள் வெளிப்படுத்தியதில்லை. எப்படி நகமும் பற்களும் அற்ற புலிகளுக்கு பலமில்லையோ அவ்வாறே ஆயுதம் அற்ற புலிகளும். எந்த கட்டத்திலும் ஒரு ஜனநாயக ரீதியிலான சூழ்நிலை ஏற்பட்டால் எத்தனையோ முன்னணிச் சக்திகள் மக்கள் நலனை முன்வைத்து வெளிப்படும். (அதற்குள் மோசமான சுயநலக்கும்பல்களும் வெற்றுத் தத்துவவாதிகளும் இருப்பார்கள் தான்.) தங்களுக்கான தலைமையை நிர்ணயிக்க வேண்டியது மக்களே அன்றி ஆயுதம் தாங்கிய சிலர் அல்ல.

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

436410 23/3

அடுத்து தாங்கள் போராட்டத்தை முன்னெடுக்கும் வரை புலிகள் போராட்டத்தை முன்னெடுக்கத் தான் வேண்டும் என்ற வாதம். இதன் நடைமுறைச் சாத்தியங்கள் பற்றிப் பார்ப்போம். தங்களுக்கு எதிரான சக்திகள் எதையும் புலிகள் வளர விட்டதே இல்லை. இவர்கள் கையில் எடுப்பதற்குள் இவர்கள் தலைகள் இருக்குமோ என்பது சந்தேகமே. அடுத்து இவர்களுக்கு அவ்வாறு ஒரு "அதிர்ஷ்டம்" கிட்டும் வரை தமிழ் மக்கள் இவ்வாறான ஒரு தலைமையின் கீழ் மடிந்து கொண்டிருக்க வேண்டுமோ? மக்கள் குரல் இப்போது தான் மேலோங்க வேண்டுமே தவிர இவர்கள் சரியான தருணம் பார்த்து போராடும் வரை மக்கள் அநியாயமாக அழிக்கப்படுவதை பார்த்துக் கொண்டு மௌனமாக இருக்க கூடாது. அப்படி இருந்தால் தாங்கள் ஆட்சிக்கு வந்தால் பிரச்சனை எல்லாமே தீர்ந்து விடும் என்கின்ற சுயநல, சந்தர்ப்பவாத தலைமைகளாகத் தான் இவர்கள் மாறுவார்கள்.

அடுத்து புலிகள் தேசிய விடுதலைப் போராட்டத்தை முன்னெடுக்கிறார்கள், ஆகவே நாங்கள் ஆதரித்துத்தான் ஆக வேண்டும் என்கின்ற நிலைப்பாடு. முன்பு சொன்னது போல் தமிழ் மக்களின் கோரிக்கைகள் நியாயமானவை என்று கருதிக் கொள்வோம். தமிழ் மக்களின் பல்கலைக்கழகப் பிரச்சனைகள், மொழிப்பிரச்சனைகள், வேலைவாய்ப்பு பிரச்சனைகள் என்றெல்லாம் வரிசையாய் அவிழ்த்து விட்டிருக்கும் "தேசிய விடுதலைப் போராட்டத்துக்கான" காரணங்களை புலிகள் எவ்வாறு "தீர்த்திருக்கிறார்கள்"?

ஒரு தேசிய விடுதலைப் போராட்டத்தின் முக்கிய நோக்கமான சுயநிர்ணய உரிமை பற்றி புலிகள் தங்கள் நிலைப்பாடு பற்றி எதுவும் தெரிவிக்கவில்லை. பேச்சுவார்த்தையின் போதோ, அதற்கு முன்போ தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையைப் பற்றி வாயே திறக்கவில்லை. கருணாநிதியின் இந்தி எதிர்ப்புப் போராட்டம் போல் ஈழப்போராட்டமும் தேவைப்படும் போது பாவிக்கப்படும் ஒரு பொருளாகவே இருக்கிறது. மக்களின் உணர்வுகளை கிளற ஈழப்போராட்டம், பதவிக்கு வர அரசாங்கத்துடன் பேசும் போது மாகாண சபையே போதும் என்று கூறல். ஒரு தேசிய இனத்திற்காக போராடுபவர்கள் மற்ற இனங்களின் தேசியத் தன்மையையும் அங்கீகரிக்க வேண்டும். ஆனால் இவர்கள் அப்பாவிச் சிங்களவர்களைக் கொன்றது எப்படி தேசிய விடுதலைப் போராட்டமாகும்? தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமையை ஏற்றுக் கொண்ட ஒரே அமைப்பான நவசமசமாஜக்கட்சியின் உறுப்பினரான அண்ணாமலை புலிகளால் கொல்லப்பட்டது எதற்காக? தேசிய விடுதலை சக்திகள் மற்ற முற்போக்கு சக்திகளுடன் நேசமான புரிந்துணர்வு கொண்டிருக்கும். ஆனால் தங்களைப் போலவே கருத்துக்களை கொண்டு போராடிக் கொண்டிருந்த மற்ற இயக்கங்களை அழிப்பது எவ்வாறு தேசிய விடுதலைக்கான போராட்டமாகும்?

தமிழ் மக்களின் "பெரும் சொத்தான" கல்விக்கு வந்த களங்கமான பல்கலைக்கழக நுழைவுப் பிரச்சனையில்... இன்று பத்து வயது பாலகர்களும் பாடசாலை படிப்பை மறந்து துப்பாக்கி ஏந்திக் கொண்டு ஆணைக்காய் காத்திருந்து, தலை கொய்யும் போது பல்கலைக்கழகப் பிரச்சனை முக்கியமானதாகவே தோன்றவில்லை. கல்வியின் நோக்கம் சிந்தனை ஆற்றலை வளர்ப்பது தான் என்றால் இங்கே ஆணைக்கு கட்டுப்பட வேண்டிய ஒரு இராணுவம் சிந்திப்பதை எந்த தலைமையும் விரும்பாது. எங்கள் சிறார்களின் கல்வி இந்த தலைமைகளால் தங்கள் த[illegible]மைகள் தொடர்ந்து ஏற்றுக் கொள்ளப்படும்படி திட்டமிட்டு அழிக்கப்பட்டிருக்கின்றன. பாடசாலைகள் பகிஷ்கரிப்பு என்று ஆரம்பித்த போராட்டங்கள் பாடசாலைகளை தகர்க்கும் அளவுக்கு வளர்ந்தது. இன்று பாடசாலையில் இருந்தே கடத்தப்படும் அளவுக்குப் போய் இருக்கிறது. இதில் யார் பல்கலைக்கழகத்துக்கு போட்டியிடப் போகிறார்கள்? இவர்களுக்கு இனி என்ன தரப்படுத்தல் வேண்டிக்கிடக்கிறது?

அடுத்தவை பற்றி புலிகளின் கருத்து என்ன? தமிழ் மக்களின் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டதற்கான அடுத்த காரணம் சிங்கள மொழித் திணிப்பு. வேலை வாய்ப்புக்கு கட்டாய சிங்களம், பெயர்ப்பலகைகளில் சிங்களம் என்றெல்லாம் கூறி மைல் கற்களில் உள்ள சிங்கள எழுத்துக்களுக்கு தார்பூசி ஆரம்பிக்கப்பட்ட போராட்டம் இன்று எங்கு போய் நிற்கிறது? புலிகள் அரசுடன் பேச்சுவார்த்தை நடத்தியபோது (என்ன பேசினார்கள் என்பது பற்றி இப்போது கூட சொல்ல மறுக்கிற அளவுக்கு ஒரு அன்னியோன்னியமான நட்பு!) இந்த மொழிப் பிரச்சனை பற்றி பேசப்பட்டதா? என்றால் அதுவும் இல்லை. புலிகளுடன் பேச்சுவார்த்தை நடந்து கொண்டிருக்கும் போது தான் மும்மொழியிலும் பாடத்திட்டம் என்று புதிய திட்டத்தை அரசாங்கம் முன்வைத்தது. மொழி காக்க புறப்பட்ட இந்த வீரர்கள் மூச்சே விடவில்லை. பேச்சுவார்த்தையை முறித்து விட்டு வெளியே வரவில்லை. "பலத்துடன் கூடிய நிபந்தனையற்ற" பேச்சுவார்த்தையின்போது தமிழ் மக்களின் மீது சிங்களம் உத்தியோக பூர்வமாக திணிக்கப் போவதாக அரசு அறிவித்தும் அதற்கு எந்த எதிர்ப்பையும் தேசிய விடுதலைப் போராளிகளான இந்த தமிழ் மக்களின் ஏகபிரதிநிதிகள் காட்டவில்லை. அவர்கள் பேசிக் கொண்டதெல்லாம் தாங்கள் தேர்தலில் பங்குபற்றுவதற்காக ஆறாவது திருத்தச்சட்டத்தை நீக்கும்படி கேட்டது தான்.

தமிழ் பிரதேசங்களில் சிங்கள ஆக்கிரமிப்பு நடைபெறுகிறது. தமிழர்களின் பூர்வீக நிலங்கள் பறிபோகின்றன என்று கூறப்பட்டது. புலிகள் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்தபோதும் தமிழ் பிரதேசங்களில் சிங்கள குடியேற்றம் நடைபெற்றுக் கொண்டு தான் இருந்தது. அது பற்றி ஆட்சேபனை எதுவும் தெரிவிக்கப்படவும் இல்லை. பேச்சுவார்த்தை முறிக்கப்படவும் இல்லை.

வேலைவாய்ப்புகளில் தமிழர்கள் புறக்கணிக்கப்படுகிறார்கள் என்று போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. புலிகள் பேச்சுவார்த்தை நடத்திக் கொண்டிருந்த போதுதான் சிங்கள அரசு இனவிகிதாசாரப்படி வேலைவாய்ப்பு வழங்கப்படும் என்று சட்ட மூலம் கொண்டு வந்தது. திறமைக்கு முக்கியத்துவம் கேட்டு போராடிய வீரச்செம்மல்கள் பேச்சுவார்த்தையை முறிக்கவும் இல்லை. ஆட்சேபனையும் தெரிவிக்கவில்லை.

இவ்வாறான செயல்களை ஆட்சேபம் தெரிவிக்காத இந்த தேசிய விடுதலைப் போராளிகள் ஆட்சேபம் தெரிவித்ததெல்லாம் ஈ.பி.ஆர்.எல்.எஃப் உடன் அரசு பேசுகிறது என்பதற்காகத் தான். இன்னொரு தமிழ் இயக்கத்துடன் பேச தயாராய் இல்லாமல் எதிரியுடன் பேச தயாராயிருந்தவர்களுக்கு எதிரி இன்னொரு தமிழனுடன் பேசுகிறது என்றதும் தன்மானம் பீறிட்டுக் கொண்டது. இதற்கு காரணம் தங்கள் அதிகார வேட்கைக்கு பங்கம் வந்து விடுமே என்று தான் பயந்தார்களே ஒழிய தமிழ் மக்களின் நலன் இவர்களுக்கு இருந்திருந்தால் அரசாங்கம் தமிழ் தேசிய போராட்டத்திற்கான அடிப்படைக் காரணங்களிலேயே கைவைத்த போது மௌனமாய் இருந்திருக்க மாட்டார்கள்.

இவ்வாறான பதவி நோக்கத்துக்காக தமிழர்களை பலியிட்டும் தமிழ் மக்களை விற்றும் போராடும் இவர்கள் தங்களுக்கு யார் யார் பதவி தருவார்களோ அவர்களுடன் எல்லாம் பேசத் தயார். (ஜே.ஆர் பயங்கரவாதத்தை ஒழிக்க பேய்களுடன் கூட்டு வைத்துக் கொள்வேன் என்றதைப் போல்) இந்திய அரசுடன் இடைக்கால அரசு பற்றி பேசும் போதும், இலங்கை அரசுடன் மாகாண சபை பற்றி பேசும் போதும் பேசப்பட்டதெல்லாம் சில பதவிக்கான ஆசனங்களும் பணமுமே. இவர்களை தேசிய சக்திகள் என்று சொல்வதும் தமிழ் மக்களுக்காக போராடுகிறார்கள், எனவே இவர்களின் கரங்களை பலப்படுத்த வேண்டும் என்பதும் தமிழ் மக்கள் தங்கள் அழிவுக்காக வழிவகுத்தலே.

சமாதானத்துக்கும் அமைதிக்குமான இறுதி வழியை புலிகள் தங்கள் அதிகார வேட்கைக்காக சீர்குலைத்து விட்டார்கள். (பேச்சுவார்த்தைக்கு போனாலும், முறித்தாலும் விமர்சிப்பதாக எங்கள் மீது குற்றம் சாட்டக்கூடும். பேச்சுவார்த்தைக்கு போனது தமிழ் மக்கள் நலனுக்காக இல்லை, இந்திய இராணுவத்தை எதிர்க்க முடியாத இயலாமையாலே. அதே போல் பேச்சுவார்த்தையை முறித்துக் கொண்டதும் தமிழ் மக்களின் உரிமை கிடைக்காததால் அல்ல, தங்களுக்கு அதிகாரம் கிடைக்காது என்பதாலேயே) தமிழ் மக்களின் அழிவைப் பற்றிய கவலை இன்றி, நின்று ஃபைட் பண்ணுகிறார்கள், தேசிய விடுதலைக்காக போராடுகிறார்கள் என்று ஆதரிப்பது என்பது சரியானதல்ல. ஒரு இனத்தின் விடுதலைக்கு முன் அது தப்பி வாழ வேண்டும். வெற்றி அல்லது வீர மரணம் என்பது வாக்குகளால் பொறுக்க பேச்சளவில் நன்றாக இருக்கும். நடைமுறையில் அப்பாவி மக்களைப் பொறுத்தவரை அர்த்தமற்றது. இங்கே தமிழ் மக்களின் முடிவு என்ன என்பதை தமிழ் மக்களே தீர்மானிக்கட்டும்.

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்